Kurusady
CATECHISM

## புனித அந்தோணியார் ஆலயம், குருசடி

**மறைக்கல்வி - வினாடிவினா 024 - மார்ச் 20, 2022 முதல் மார்ச் 26 , 2022 வரை.**

# இருபத்தி நான்காவது வாரத்திற்கான வினாடிவினா

**சரியான பதிலை டிக் [ ✔ ] செய்யவும்** **மதிப்பெண்கள்: 100**

**கேள்வி 01**

அருள் நிறைந்த மரியே வாழ்க! ஆண்டவர் உம்முடனே பெண்களுக்குள் ஆசி பெற்றவர் நீரே, உம்; திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசி பெற்றவரே! என்று திருத்தம் செய்தவர் யார் ?

(கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 70)

[ ] திருத்தந்தை 22-ம் யோவான் (1316-1334)

[ ] திருத்தந்தை 9-ம் போனிபஸ் (1390)

[ ] திருத்தந்தை 4-ம் உர்பன் (1261-1264)

[ ] திருத்தந்தை 6-ம் உர்பன் ((1378-1389)

**கேள்வி 02**

“உம்; திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசி பெற்றவரே! என்ற மங்கள வார்த்தை ஜெபத்தை” உறுதி செய்தவர் யார் ?

(கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 72)

[ ] திருத்தந்தை 4-ம் பவுல்

[ ] திருத்தந்தை 22-ம் யோவான்

[ ] திருத்தந்தை 6-ம் உர்பன்

[ ] திருத்தந்தை 9-ம் போனிபஸ்

**கேள்வி 03**

செல்வம் கொழிக்கும் நண்பர்களைக் கைவிட்டாலும்  ஜெபமாலை செபிப்பதை ஒரு நாளும் கைவிடமாட்டேன் என்றுக் கூறியவர் யார் ?

(கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 87)

[ ] புனித தோமா

[ ] புனித தோமினிக் சாவியோ

[ ] புனித ஜாண் போஸ்கோ

[ ] புனித பிரான்சிஸ் அசிசியார்

**கேள்வி 04**

கிறிஸ்துவின் முகத்தை மரியாவுடன் தியானிப்பது எது? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 96)

[ ] மங்கள வார்த்தை ஜெபம் சொல்வது

[ ] கிருபை தயாபத்து மந்திரம் சொல்வது

[ ] ஜெபமாலை ஜெபிப்பது

[ ] கிறிஸ்தவ சமூகங்களில் ஜெபமாலை ஜெபிப்பது

**கேள்வி 05**

அதிகாலையில் வானத்தில் காணப்படும் "வெள்ளி" என்ற கோளை குறிப்பது எது ? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 138)

[ ] கடல் நட்சத்திரம்

[ ] கடல் மீன்கள்

[ ] விடியற்கால விண்மீண்

[ ] விடிவெள்ளி

**கேள்வி 06**

புனித கன்னியின் விண்ணேற்பு அவரது மகனின் உயிர்ப்பில் தனிப்பட்ட பங்கேற்பாகவும் கிறிஸ்தவர்களின் உயிர்ப்புக்கு ______________ ஆகவும் இருக்கிறது என்று கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி போதிக்கிறது ? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 143)

[ ] அருள் அடையாளமாகவும்

[ ] முன்னடையாளமாகவும்

[ ] அருள் அடையாளமாகவும், முன்னடையாளமாகவும்

[ ] இவை எதுவும் இல்லை

**கேள்வி 07**

இறைவனின் திருவுளத்தைப் புறகணித்த வானதூதர்களே____________ என்று பெயர் பெற்றதாக திருச்சபை கற்பிக்கின்றது ? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 143)

[ ] அலகைகள்

[ ] பாவம் செய்பவர்கள்

[ ] பாவத்திற்கு தள்ளப்பட்டவர்கள்

[ ] பாவத்தினால் தீண்டப்பட்டவர்கள்

**கேள்வி 08**

வான தூதர்களை விடத் தாழ்ந்த இனத்தில் பிறக்கும் இறைமகனையும், அவரது தாயையும் வணங்க முடியாது என்று கிளர்ச்சி செய்தவர் யார் ? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 144)

[ ] லூசிபர் தலைமையிலான மற்ற திருத்தூதர்கள்

[ ] லூசிபர் தலைமையிலான மற்ற வானதூதர்கள்

[ ] லூசிபர் தலைமையிலான மற்ற இடையர்கள்

[ ] லூசிபர் தலைமையிலான மற்ற அறிஞர்கள்

**கேள்வி 09**

கெருபுகள் மற்றும் சேராபின்களை விடவும் தூயவராக கேள்விக்கு இடமின்றி மற்ற அனைத்து புனிதர்களை விடவும் மாபெரும் மகிமையில் அக்களித்தவர் யார் ? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 144)

[ ] மரியா

[ ] எலிசபெத்

[ ] எஸ்தர்

[ ] ரூத்து

**கேள்வி 10**

அரசி என்ற முறையில் மரியா எதற்கு உயர்த்தப் பெற்றுள்ளார் ? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 144)

[ ] அரியணைக்கு

[ ] விண்ணக அரசியாக

[ ] பட்டத்து அரசியாக

[ ] ஒப்பிட முடியாத மகிமைக்கு

**கேள்வி 11**

கிறிஸ்துவைக் குறித்த திருப்பாடலில் கூறப்பட்டுள்ளது என்ன ? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 144)

[ ] என்றுமுளது உமது அரியணை

[ ] ஒப்பிட முடியாத மகிமை

[ ] மனித குலத்தின் மீட்பர்

[ ] படைப்புகளின் அரசி

**கேள்வி 12**

வடிவாக வலப்புறம் நிற்கின்றாள் பட்டத்து அரசி என்பதன் பொருள் என்ன ? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 144)

[ ] அடைக்கலத்தில் புகலடைந்திருக்கிறார்

[ ] உன்னத ஆசியால் அவர் நிரப்பப் பெற்றுள்ளார்

[ ] கடவுளின் அருளால் உயர்த்தப் பெற்றுள்ளார்

[ ] கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளார்

**கேள்வி 13**

கார்மேல் சபைத்தலைவரான புனித சைமன் ஸ்டோக்கிற்கு அன்னை மரியா காட்சி கொடுத்து அவருக்கு எதை அறிமுகம் செய்து வைத்தார் ? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 169)

[ ] பழுப்பு உத்திரியம் என்று அழைக்கப்படும் கார்மேல் உத்திரியத்தை

[ ] பழுப்பு உத்திரியம் என்று அழைக்கப்படும் கார்மேல் மலையை

[ ] பழுப்பு உத்திரியம் என்று அழைக்கப்படும் கார்மேல் துறவிகளை

[ ] பழுப்பு உத்திரியம் என்று அழைக்கப்படும் கார்மேல் விழா

**கேள்வி 14**

பழுப்பு உத்திரியம் என்று அழைக்கப்படும் கார்மேல் உத்திரியத்தை அணிபவர்கள் _______________ பெறுவார்கள் என்று மரியா வாக்களித்தார் ?

(கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 169)

[ ] வீரம் அடைவார்கள்

[ ] பக்தி பெறுவார்கள்

[ ] பாதுகாப்பு பெறுவார்கள்

[ ] அமைதி பெறுவார்கள்

**கேள்வி 15**

வியாகுல அன்னைக்கு முதல் பீடம் எவ்வாறு எந்த இடத்தில் எழுப்ப பட்டது ?

(கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 175)

[ ] 1220-ல் ஜெர்மனியின் ஸ்கொனாவ் என்ற இடத்தில் சிஸ்டர்சியன் துறவற மடத்தில்

[ ] 1221-ல் ஜெர்மனியின் ஸ்கொனாவ் என்ற இடத்தில் சிஸ்டர்சியன் துறவற மடத்தில்

[ ] 1222-ல் ஜெர்மனியின் ஸ்கொனாவ் என்ற இடத்தில் சிஸ்டர்சியன் துறவற மடத்தில்

[ ] 1223-ல் ஜெர்மனியின் ஸ்கொனாவ் என்ற இடத்தில் சிஸ்டர்சியன் துறவற மடத்தில்

**கேள்வி 16**

மெக்சிகோவின் குவாதலூப்பே பகுதியில் அன்னை மரியா யாருக்கு காட்சி கொடுத்தார் ?

(கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 180)

[ ] சிறுவர்களுக்கு

[ ] யுவான் தியாகோ என்ற விவசாயிக்கு

[ ] யுவான் என்ற அரசர்

[ ] புனிதர்களுக்கு

**கேள்வி 17**

திருத்தந்தை 6-ம் பவுல் வெளியிட்ட மரியாவின் பக்தி என்ற திருத்தூதுவ அறிவுரை எதன் முக்கியத்துவத்தை விளக்குகிறது ? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 93)

[ ] ஜெபமாலை

[ ] திருச்சபையின் போதனைகள்

[ ] திருச்சபையின் முக்கியத்துவத்தை

[ ] ஜெபமாலை மற்றும் மூவேளை ஜெபத்தின் முக்கியத்துவத்தை

**கேள்வி 18**

திருத்தந்தை 6-ம் பவுல் நற்செய்தியின் சுருக்கமே ____________ என்றார் ? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 93)

[ ] மரியாவின் பக்தி

[ ] மனத்துயர் ஜெபம்

[ ] ஜெபமாலை

[ ] மூவேளை ஜெபம்

**கேள்வி 19**

தூய ஆவியாரின் இராவுணவு அறையைத் தாண்டி வெளியில் நிரம்பியது எது ? (நம் தாய் அன்னை மரியா - கவிதா ஆல்பர்ட - பக். 134)

[ ] அருள் அடையாளங்கள்

[ ] பேழைகள்

[ ] அருள் கொடைகள்

[ ] கற்பலகைகள்

**கேள்வி 20**

யூதாஸ் இறந்த பிறகு அவருக்குப் பதில் யாரை பன்னிரெண்டு சீடர்களில் ஒருவராக ஏற்றுக்கொண்டார்? (நம் தாய் அன்னை மரியா - கவிதா ஆல்பர்ட - பக். 133)

[ ] பேதுரு

[ ] மத்தியாஸ்

[ ] தாவீது

[ ] யாக்கோபு

**கேள்வி 21**

திருச்சபைக்கு தலைவர் யார் ? (நம் தாய் அன்னை மரியா - கவிதா ஆல்பர்ட - பக். 136)

[ ] ஸ்தேவான்

[ ] பேதுரு

[ ] யோவான்

[ ] தாவீது

**கேள்வி 22**

தூய ஆவி எப்போது வருவார் என்று மரியன்னை அறிந்திருந்தார் ? (நம் தாய் அன்னை மரியா - கவிதா ஆல்பர்ட - பக். 133)

[ ] இயேசு உயிர்த்த 20-ம் நாள்

[ ] இயேசு உயிர்த்த 30-ம் நாள்

[ ] இயேசு உயிர்த்த 40-ம் நாள்

[ ] இயேசு உயிர்த்த 50-ம் நாள்

**கேள்வி 23**

மனம் திரும்பியவர்களுக்கு திருத்தூதர்கள் எதை அறிவித்து அவர்களை திருமுழுக்குப் பெறச்செய்தனர் ? (நம் தாய் அன்னை மரியா - கவிதா ஆல்பர்ட - பக். 141)

[ ] கடவுளின் திட்டத்தை

[ ] இயேசுவின் மாட்சியை

[ ] தூய ஆவியின் வல்லமையை

[ ] நற்செய்தியின் மதிப்பீடுகளை

**கேள்வி 24**

திருமுழுக்கால் பதிக்கப்படுவது எது? (நம் தாய் அன்னை மரியா - கவிதா ஆல்பர்ட - பக். 142)

[ ] ஆன்மாவில் ஒரு ஞான முத்திரை

[ ] உடன்படிக்கை பேழை

[ ] பன்னிரு விண்மீண்கள்

[ ] நம்பிக்கைப் பேருண்மைகள்

**கேள்வி 25**

உலக அளவில் அன்னை வழங்கிய காட்சிகள் மொத்தம் எத்தனை ?

(நம் தாய் அன்னை மரியா - கவிதா ஆல்பர்ட - பக். 221)

[ ] 280

[ ] 285

[ ] 297

[ ] 299

---

இந்த கேள்வித்தாள் உங்கள் பயிற்சிக்கு வெளியிடப்பட்டுள்ளது.

உங்கள் பதிலை ஆன்லைனில் சமர்ப்பிக்க, இந்த இணையதள முகவரியில் பதிவு செய்யவும்
https://www.kurusady.com/catechism/

ஆன்லைனில் சமர்ப்பிக்க முடியாதவர்கள், இந்த வினாத்தாளை அச்சிட்டு உங்கள் பதிலை டிக் [✔] செய்து பங்கு அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம்.

இப்படிக்கு,
அருட்பணி. பெர்பெச்சுவல் ஆன்றனி,
பங்கு தந்தை,
புனித அந்தோணியார் ஆலயம், குருசடி.

---